விமான நிலையம் டு மெப்ஸ்

# டெம்போ டிராவலர் இணைப்பு சேவை

## மெட்ரோ ரயில்வே தகவல்

சென்னை, பிப்.26: மெட்ரோ ரயிலை பயன்படுத்துவோரின் வசதிக்காக விமான நிலைய மெட்ரோ ரயில் நிலையம் முதல் மெப்ஸ் வரை கூடுதலாக டெம்போ டிராவலர் இணைப்பு சேவை நேற்று முதல் தொடங்கப்பட்டுள்ளது என நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்துமெட்ரோ ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் பயணிகள் வசதிக்காக பல போக்குவரத்து இணைப்பு சேவைகளான ஷேர் ஆட்டோ, ஷேர் டாக்சி, சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்தின் சிறிய பேருந்து சேவை, மெட்ரோ சீருந்து இணைப்பு சேவை, இ-பைக் மற்றும் மிதிவண்டி ஆகியவற்றை வழங்கி வருகிறது.

தற்போது, கூடுதலாக விமான நிலைய மெட்ரோ ரயில் நிலையம் முதல் மெப்ஸ் வரை குளிர்சாதன வசதியுடன் கூடிய டெம்போ டிராவலர் இணைப்பு சேவை ₹20 கட்டணத்தில் நேற்று முதல் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இச்சேவை 30 நிமிட இடைவெளியில் இயக்கப்படும்.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், ஏற்கனவே விமான நிலைய மெட்ரோ ரயில் நிலையம் முதல் பம்மல் வரை சென்றுவர 5 சீருந்து இணைப்பு சேவை மற்றும் 1 குளிர்சாதன வசதியுடன் கூடிய டெம்போ டிராவலர் இணைப்பு சேவைகளையும், விமான நிலைய மெட்ரோ ரயில் நிலையம் முதல் மெப்ஸ் வரை சென்றுவர 4 மெட்ரோ சீருந்து இணைப்பு சேவைகளையும் வழங்கி வருகிறது.

இதனுடன் கூடுதலாக, விமான நிலைய மெட்ரோ ரயில் நிலையம் முதல் மெப்ஸ் வரை சென்றுவர 1 குளிர்சாதன வசதியுடன் கூடிய டெம்போ டிராவலர் இணைப்பு சேவை தொடங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.